# thiruththoNDar purANam (periya purANam) panniraNDAm tirumuRai

## (in tamil script, TSCII format)

## சேக்கிழார் அருளிய

# திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்

## பன்னிரண்டாம் திருமுறை

### முதற் காண்டம்

# 2 தில்லை வாழ் அந்தணர் சருக்கம்

---

This page is courtasy of Project Madurai. This thirumuRai is being proof-read. So this current form may have errors in it.

---

periya puranam in tscii format file generated from Koeln version using convertor (two corrections n2 and jn) file yet to be proof/read file edited to be in TSCII 1.7 ENCODING ----------------------------------------------



| Periya puranam text | | | |
|---|---|---|---|
| Chapter No. | Transliterated text | TSCII HTML format | Tamil PDF |
| 1 | thirumalaic carukkam | திருமலைச் சருக்கம் | PDF |
| 2 | thillaivAzandhaNar carukkam | தில்லைவாழந்தணர் சருக்கம் | PDF |
| 3 | ilaimalintha carukkam | இலைமலிந்த சருக்கம் | PDF |
| 4 | mummaiyAl ulakANDa carukkam | மும்மையால் உலகாண்ட சருக்கம் | PDF |
| 5 | thiruninRa carukkam | திருநின்ற சருக்கம் | PDF |

| | | | |
|---|---|---|---|
| 6 | vambaRA varivaNDu carukkam - thirunyAna cambanthar purANam | வம்பறா வரிவண்டு சருக்கம் - திருஞானசம்பந்தர் புராணம் | PDF |
| | vambaRA varivaNDu carukkam - EyarkOn muthalAya nAyanmArkaL | வம்பறா வரிவண்டு சருக்கம் - ஏயர்கோன் முதலாய நாயன்மார்கள் | PDF |
| 7 | vArkoNDa vanamulaiyAL carukkam | வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் | PDF |
| 8 | poyyaDimaiyillAtha pulavar carukkam | பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம் | PDF |
| 9 | kaRaikkaNDan carukkam | கறைக்கண்டன் சருக்கம் | PDF |
| 10 | kaDal cUzntha carukkam | கடல் சூழ்ந்த சருக்கம் | PDF |
| 11 | paththarAyp paNivAr carukkam | பத்தராய்ப் பணிவார் சருக்கம் | PDF |
| 12 | manniyacIrc carukkam | மன்னியசீர்ச் சருக்கம் | PDF |
| 13 | veLLAnaic carukkam | வெள்ளானைச் சருக்கம் | PDF |


# 2 தில்லை வாழ் அந்தணர் சருக்கம்

1 தில்லை வாழ் அந்தணர் புராணம்

1. ஆதியாய் நடுவும் ஆகி அளவு இலா அளவும் ஆகிச் 0350-1
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப் 0350-2
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப் 0350-3
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி 0350-4

2. கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி 0351-1
அற்புதக் கோலம் நீடி அரு மறைச் சிறத்தின் மேலாம் 0351-2
சிற்பர வியோமமம் ஆகும் திருச் சிற்றம்பலத்துள் நின்று 0351-3
பொற்பு உடன் நடம் செய்கின்ற பூம் கழல்கள் போற்றி போற்றி 0351-4

3. போற்றி நீள் தில்லை வாழ் அந்தணர் திறம் புகலல் உற்றேன் 0352-1
நீற்றினால் நிறைந்த கோல நிருத்தனுக்கு உரிய தொண்டாம் 0352-2
போற்றினார் பெருமைக்கு எல்லை ஆயினார் பேணி வாழும் 0352-3
ஆற்றினார் பெருகும் அன்பால் அடித்தவம் புரிந்து வாழ்வார் 0352-4

4. பொங்கிய திருவில் நீடும் பொற்பு உடைப் பணிகள் ஏந்தி 0353-1
மங்கலத் தொழில்கள் செய்து மறைகளால் துதித்து மற்றும் 0353-2
தங்களுக்கு ஏற்ற பண்பில் தரும் பணித் தலை நின்று உய்த்தே 0353-3

அங்கணர் கோயில் உள்ளா அகம் படித் தொண்டு செய்வார் 0353-4

5. வரு முறை எரி மூன்று ஓம்பி மன் உயிர் அருளால் மல்க 0354-1
தருமமே பொருளாக் கொண்டு தத்துவ நெறியில் செல்லும் 0354-2
அருமறை நான்கின் ஒடு ஆறு அங்கமும் பயின்று வல்லார் 0354-3
திரு நடம் புரிவார்க்கு ஆள் ஆம் திருவினால் சிறந்த சீரார் 0354-4

6. மறு இலா மரபின் வந்து மாறு இலா ஒழுக்கம் பூண்டார் 0355-1
அறு தொழில் ஆட்சியால் ஏ அருங் கலி நீக்கி உள்ளார் 0355-2
உறுவது நீற்றின் செல்வம் எனக் கொளும் உள்ளம் மிக்கார் 0355-3
பெறுவது சிவன் பால் அன்பால் பேறு எனப் பெருகி வாழ்வார் 0355-4

7. ஞானமே முதலாம் நான்கும் நவை அறத் தெரிந்து மிக்கார் 0356-1
தானமும் தவமும் வல்லார் தகுதியின் பகுதி சார்ந்தார் 0356-2
ஊனம் மேல் ஒன்றும் இல்லார் உலகெலாம் புகழ்ந்து போற்றும் 0356-3
மானமும் பொறையும் தாங்கி மனை அறம் புரிந்து வாழ்வார் 0356-4

8. செம்மையால் தணிந்த சிந்தைத் தெய்வ வேதியர்கள் ஆனார் 0357-1
மும்மை ஆயிரவர் தாங்கள் போற்றிட முதல்வன் ஆரை 0357-2
இம்மையே பெற்று வாழ்வார் இனிப் பெறும் பேறு ஒன்று இல்லார் 0357-3
தம்மையே தமக்கு ஒப்பான நிலைமையால் தலைமை சார்ந்தார் 0357-4

9. இன்று இவர் பெருமை எம்மால் இயம்பல் ஆம் எல்லைத்து ஆமோ 0358-1
தென் தமிழ்ப் பயனாய் உள்ள திருத் தொண்டத் தொகை முன் பாட 0358-2
அன்று வன் தொண்டர் தம்மை அருளிய ஆரூர் அண்ணல் 0358-3
முன் திரு வாக்கால் கோத்த முதல் பொருள் ஆனார் என்றால் 0358-4

10. அகல் இடத்து உயர்ந்த தில்லை அந்தணர் அகிலம் எல்லாம் 0359-1
புகழ் திரு மறையோர் என்றும் பொது நடம் போற்றி வாழ 0359-2
நிகழ் திரு நீல கண்டக் குயவனார் நீடு வாய்மை 0359-3
திகழும் அன்புடைய தொண்டர் செய் தவம் கூறல் உற்றாம் 0359-4

## 2 திருநீலகண்ட நாயனார் புராணம்

1. வேதியர் தில்லை மூதூர் வேட் கோவர் குலத்து வந்தார் 0360-1
மாது ஒரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே 0360-2
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக் கூத்து ஆடும் 0360-3
நாதனார் கழல்கள் வாழ்தி வழிபடும் நலத்தின் மிக்கார் 0360-4

2. பொய் கடிந்து அத்தின் வாழ்வார் புனல் சடை முடியார்க்கு அன்பர் 0361-1
மெய் அடியார் கட்கு ஆன செயும் விருப்பில் நின்றார் 0361-2
வையகம் போற்றும் செய்கை மனை அறம் புரிந்து வாழ்வார் 0361-3
சைவ மெய்த் திருவின் சார்வே பொருள் எனச் சாரும் நீரார் 0361-4

3. அளவு இலா மரபின் வாழ்க்கை மண் கலம் அமுதுக்கு ஆக்கி 0362-1
வளர் இளம் திங்கள் கண்ணி மன்று உளார் அடியார்க்கு என்றும் 0362-2
உளம் மகிழ் சிறப்பின் மல்க ஒடு அளித்து ஒழுகும் நாளில் 0362-3
இளமை மீது ஊர இன்பத் துறையினில் எளியர் ஆனார் 0362-4

4. அவர் தம் கண் மனைவியாரும் அருந்ததி கற்பின் மிக்கார் 0363-1
புவனங்கள் உய்ய ஐயர் பொங்கு நஞ்சு உண்ண யாம் செய் 0363-2
தவ நின்று அடுத்தது என்னத் தகைந்து தான் தரித்தது என்று 0363-3
சிவன் எந்தை கண்டம் தன்னைத் திரு நீல கண்டம் என்பார் 0363-4

5. ஆன தம் கேள்வர் அங்கு ஓர் பரத்தை பால் அணைந்து நண்ண 0364-1
மான முன் பொறாது வந்த ஊடலால் மனையின் வாழ்க்கை 0364-2
ஏனைய எல்லாம் செய்தே உடன் உறைவு இசையார் ஆனார் 0364-3
தேன் அலர் கமலப் போதில் திருவினும் உருவம் மிக்கார் 0364-4

6. மூண்ட அப் புலவி தீர்க்க அன்பனார் முன்பு சென்று 0365-1
பூண்ட அங்கு இளமென் சாயல் பொன் கொடி அனையார் தம்மை 0365-2
வேண்டுவ இரந்து கூறி மெய் உற அணையும் போதில் 0365-3
தீண்டுவீர் ஆயின் எம்மைத் திரு நீல கண்டம் என்றார் 0365-4

7. ஆதியார் நீல கண்டத்து அளவு தாம் கொண்ட ஆர்வம் 0366-1
பேதியா ஆணை கேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி 0366-2
ஏதிலார் போல நோக்கி எம்மை என்றதனால் மற்றை 0366-3
மாதரார் தமையும் என் தன் மனத்தினும் தீண்டேன் என்றார் 0366-4

8. கற்பு உறு மனைவியாரும் கணவனார்க்கு ஆன எல்லாம் 0367-1
பொற்பு உற மெய் உறாமல் பொருந்துவ போற்றிச் செய்ய 0367-2
இல் புறம்பு ஒழியாது அம் கண் இருவரும் வேறு வைகி 0367-3
அன்பு உறு புணர்ச்சி இன்மை அயல் அறியாமை வாழ்ந்தார் 0367-4

9. இளமையின் மிக்கு உளார்கள் இருவரும் அறிய நின்ற 0368-1
அளவு இல் சீர் ஆணை போற்றி ஆண்டுகள் பலவும் செல்ல 0368-2
வளம் மலி இளமை நீங்கி வடி உறு மூப்பு வந்து 0368-3
தளர் ஒடு சாய்ந்தும் அன்பு தம்பிரான் திறத்துச் சாயார் 0368-4

10. இந் நெறி ஒழுகும் நாளில் எரி தளர்ந்தது என்ன நீண்ட 0369-1
மின் ஒளிர் சடையோன் தானும் தொண்டரை விளக்கம் காண 0369-2
நல் நெறி இதுவாம் என்று ஞாலத்தார் விரும்பி உய்யும் 0369-3
அந் நெறி காட்டும் ஆற்றல் அருள் சிவ யோகி ஆகி 0369-4

11. கீள் ஒடு கோவணம் சாத்திக் கேடு இலா 0370-1
வாள் விடு நீற்று ஒளி மலர்ந்த மேனி மெல் 0370-2
தோள் ஒடு மார்பின் இடைத் துவளும் நூல் உடன் 0370-3
நீள் ஒளி வளர் திரு முண்ட நெற்றியும் 0370-4

12. நெடும் சடை கரந்திட நெறித்த பம்பையும் 0371-1
விடும் கதிர் முறுவல் வெண் நிலவும் மேம்பட 0371-2
இடும் பலிப் பாத்திரம் ஏந்து கையராய் 0371-3
நடந்து வேட்கோவர் தம் மனையில் நண்ணினார் 0371-4

13. நண்ணிய தவச் சிவ யோக நாதரைக் 0372-1
கண் உற நோக்கிய காதல் அன்பர் தாம் 0372-2
புண்ணியத் தொண்டர் ஆம் என்று போற்றி செய்து 0372-3
எண்ணிய வகையினால் எதிர் கொண்டு ஏத்தினார் 0372-4

14. பிறை வளர் சடை முடிப் பிரானைத் தொண்டர் என்று 0373-1
உறை உளில் அணைந்து பேர் உவகை கூர்ந்திட 0373-2
முறைமை இன் வழி பட மொழிந்த பூசைகள் 0373-3
நிறை பெரு விருப்போடு செய்து நின்ற பின் 0373-4

15. எம்பிரான் யான் செயும் பணி எது என்றனர் 0374-1
வம்பு உலாம் மலர்ச் சடை வள்ளல் தொண்டனார் 0374-2
உம்பர் நாயகனும் இவ் ஓடு நின்பால் வைத்து 0374-3
நம்பி நீ தருக நாம் வேண்டும் போது என்று 0374-4

16. தன்னை ஒப்பு அரியது தலத்துத் தன் உழைத் 0375-1
துன்னிய யாவையும் தூய்மை செய்வது 0375-2
பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவது 0375-3
இன்ன தன்மையது இது வாங்கு நீ என 0375-4

17. தொல்லை வேட்கோவர் தம் குலத்துள் தோன்றிய 0376-1
மல்கு சீர்த் தொண்டனார் வணங்கி வாங்கிக் கொண்டு 0376-2

ஒல்லையின் மனையில் ஓர் மருங்கு காப்பு உறும் 0376-3
எல்லையில் வைத்து வந்து இறையை எய்தினார் 0376-4

18. வைத்த பின் மறையவர் ஆகி வந்து அருள் 0377-1
நித்தனார் நீங்கிட நின்ற தொண்டரும் 0377-2
உய்த்து உடன் போய் விடை கொண்டு மீண்டனர் 0377-3
அத்தர் தாம் அம்பலம் அணைய மேவினார் 0377-4

19. சால நாள் கழிந்த பின்பு தலைவனார் தாம் முன் வைத்த 0378-1
கோலம் ஆர் ஓடு தன்னைக் குறி இடத்து அகலப் போக்கிச் 0378-2
சீலம் ஆர் கொள்கை என்றும் திருந்து வேட்கோவர் தம்பால் 0378-3
வாலி தாம் நிலைமை காட்ட முன்பு போல் மனையில் வந்தார் 0378-4

20. வந்த பின் தொண்டனாரும் எதிர் வழி பாடு செய்து 0379-1
சிந்தை செய்து அருளில் எங்கள் செய்தவம் என்று நிற்ப 0379-2
முந்தை நாள் உன்பால் வைத்த மெய் ஒளி விளங்கும் ஓடு 0379-3
தந்து நில் என்றான் எல்லாம் தான் வைத்து வாங்க வல்லான் 0379-4

21. என்றவர் விரைந்து கூற இருந்தவர் ஈந்த ஓடு 0380-1
சென்று முன் கொணர்வான் புக்கார் கண்டிலர் திகைத்து நோக்கி 0380-2
நின்றவர் தம்மைக் கேட்டார் தேடியும் காணார் மாயை 0380-3
ஒன்றும் அங்கு அறிந்திலார் தாம் உரைப்பது ஒன்று இன்றி நின்றார் 0380-4

22. மறைவன் ஆகி நின்ற மலைமகள் கேள்வன் தானும் 0381-1
உறை உளில் புக்கு நின்ற ஒரு பெருந் தொண்டர் கேட்ப 0381-2
இறையில் இங்கு எய்தப் புக்காய் தாழ்த்தது என் என்ன வந்து 0381-3
கறை மறை மிடற்றினானைக் கை தொழுது உரைக்கல் உற்றார் 0381-4

23. இழை அணி முந்நூல் மார்பின் எந்தை நீர் தந்து போன 0382-1
விழை தகும் ஓடு வைத்த வேறு இடம் தேடிக் காணேன் 0382-2
பழைய மற்று அதனில் நல்ல பாத்திரம் தருவன் கொண்டு இப் 0382-3
பிழையினைப் பொறுக்க வேண்டும் பெரும என்று இறைஞ்சி நின்றார் 0382-4

24. சென்னியால் வணங்கி நின்ற தொண்டரைச் செயிர்த்து நோக்கி 0383-1
எனிது மொழிந்தவா நீ யான் வைத்த மண் ஓடு அன்றிப் 0383-2
பொன்னினால் அமைத்துத் தந்தாய் ஆயினும் கொள்ளேன் போற்ற 0383-3
முன்னை நான் வைத்த ஓடே கொண்டு வா என்றான் முன்னோன் 0383-4

25. கேடு இலாப் பெரியோய் என்பால் வைத்தது கெடுதலாலே 0384-1
நாடியும் காணேன் வேறு நல்லது ஓர் ஓடு சால 0384-2
நீடு செல்வது தான் ஒன்று தருகின்றேன் எனவும் கொள்ளாது 0384-3
ஊடி நின்று உரைத்தது என் தன் உணர்வு எலாம் ஒழித்தது என்ன 0384-4

26. ஆவது என் உன்பால் வைத்த அடைக்கலப் பொருளை வெளவிப் 0385-1
பாவகம் பலவும் செய்து பழிக்கு நீ ஒன்றும் நாணாய் 0385-2
யாவரும் காண உன்னை வளைத்து நான் கொண்டே அன்றிப் 0385-3
போவதும் செய்யேன் என்றான் புண்ணியப் பொருளாய் நின்றான் 0385-4

27. வளத்தினால் மிக்க ஓடு வெளவினேன் அல்லேன் ஒல்லை 0386-1
உளத்தினும் களவிலாமைக்கு என் செய்கேன் உரையும் என்ன 0386-2
களத்து நஞ்சு ஒளித்து நின்றான் காதல் உன் மகனைப் பற்றிக் 0386-3
குளத்தினில் மூழ்கிப் போ என்று அருளினான் கொடுமை இல்லான் 0386-4

28. ஐயர் நீர் அருளிச் செய்த வண்ணம் யான் செய்வதற்குப் 0387-1
பொய் இல் சீர்ப் புதல்வன் இல்லை என் செய்கேன் புகலும் என்ன 0387-2
மை அறு சிறப்பின் மிக்க மனையவள் தன்னைப் பற்றி 0387-3
மொய் அலர் வாவி புக்கு மூழ்குவாய் என மொழிந்தார் 0387-4

29. கங்கை நதி கரந்த சடை கரந்து அருளி எதிர் நின்ற 0388-1
வெம் கண் விடையவர் அருள வேட்கோவர் உரைசெய்வார் 0388-2
எங்களில் ஓர் சபதத்தால் உடன் மூழ்க இசைவு இல்லை 0388-3
பொங்கு புனல் யான்மூழ்கித் தருகின்றேன் போதும் என 0388-4

30. தந்தது முன் தாராதே கொள்ளாமைக்கு உன் மனைவி 0389-1
அம் தளிர்ச் செம் கைப்பற்றி அலை புனலில் மூழ்காதே 0389-2
சிந்தை வலித்து இருக்கின்றாய் தில்லை வாழ் அந்தணர்கள் 0389-3
வந்து இருந்த பேர் அவையில் மன்னுவன் யான் எனச் சென்றார் 0389-4

31. நல் ஒழுக்கம் தலை நின்றார் நான் மறையின் துறை போனார் 0390-1
தில்லை வாழ் அந்தணர்கள் வந்து இருந்த திருந்து அவையில் 0390-2
எல்லை இலான் முன் செல்ல இரும் தொண்டர் அவர் தாமும் 0390-3
மல்கு பெரும் காதலினால் வழக்கு மேல் இட்டு அணைந்தார் 0390-4

32. அந்தணன் ஆம் எந்தை பிரான் அரு மறையோர் முன் பகர்வான் 0391-1
இந்த வேட்கோவன்பால் யான் வைத்த பாத்திரத்தைத் 0391-2
தந்து ஒழியான் கெடுத்தானேல் தன் மனைவி கைப்பற்றி 0391-3
வந்து மூழ்கியும் தாரான் வலி செய்கின்றான் என்றார் 0391-4

33. நறை கமழும் சடை முடியும் நால் தோளும் முக் கண்ணும் 0392-1
கறை மருவும் திரு மிடரும் கரந்து அருளி எழுந்து அருளும் 0392-2
மறையவன் இத்திறம் மொழிய மா மறையோர் உரை செய்வார் 0392-3
நிறையுடைய வேட்கோவர் நீர் மொழியும் புகுந்தது என 0392-4

34. நீள் நிதியாம் இது என்று நின்ற இவர் தரும் ஓடு 0393-1
பேணி நான் வைத்த இடம் பெயர்ந்து கரந்தது காணேன் 0393-2
பூண் அணி நூல் மணி மார்பீர் புகுந்த பரிசு இது என்று 0393-3
சேண் இடையும் தீங்கு அடையாத் திருத்தொண்டர் உரைசெய்தார் 0393-4

35. திரு உடை அந்தணாளர் செப்புவார் திகழ்ந்த நீற்றின் 0394-1
உரு உடை இவர் தாம் வைத்த ஓட்டினைக் கொடுத்தீர் ஆனால் 0394-2
தரும் இவர் குளத்தில் மூழ்கித் தருக என்று உரைத்தார் ஆகில் 0394-3
மருவிய மனைவியொடு மூழ்குதல் வழக்கே என்றார் 0394-4

36. அரும் தவத் தொண்டர் தாமும் அந்தணர் மொழியக் கேட்டுத் 0395-1
திருந்திய மனைவியாரைத் தீண்டாமை செப்ப மாட்டார் 0395-2
பொருந்திய வகையால் மூழ்கித் தருகின்றேன் போதும் என்று 0395-3
பெரும் தவ முனிவரோடும் பெயர்ந்து தம் மனையைச் சார்ந்தார் 0395-4

37. மனைவியார் தம்மைக் கொண்டு மறைச் சிவ யோகியார் முன் 0396-1
சினவிடைப் பாகர் மேவும் திருப்புலீச் சுரத்து முன்னர் 0396-2
நனை மலர்ச் சோலை வாவி நண்ணித் தம் உண்மை காப்பார் 0396-3
புனை மணி வேணுத் தண்டின் இரு தலை பிடித்துப் புக்கார் 0396-4

38. தண்டு இரு தலையும் பற்றிப் புகும் அவர் தம்மை நோக்கி 0397-1
வெண் திரு நீற்று முண்ட வேதியர் மாதைத் தீண்டிக் 0397-2
கொண்டு உடன் மூழ்கீர் என்னக் கூடாமை பாரோர் கேட்கப் 0397-3
பண்டு தம் செய்கை சொல்லி மூழ்கினார் பழுது இலாதார் 0397-4

39. வாவியின் மூழ்கி ஏறும் கணவரும் மனைவி யாரும் 0398-1
மேவிய மூப்பு நீங்கி விருப்பு உறும் இளமை பெற்றுத் 0398-2
தேவரும் முனிவர் தாமும் சிறப்பொடு பொழியும் தெய்வப் 0398-3
பூவின் மா மழையின் மீள மூழ்குவார் போன்று தோன்ற 0398-4

40. அந்நிலை அவரைக் காணும் அதிசயம் கண்டார் எல்லாம் 0399-1
முன்நிலை நின்ற வேத முதல் வரைக் கண்டார் இல்லை 0399-2
இந்நிலை இருந்த வண்ணம் என் என மருண்டு நின்றார் 0399-3

துன்னிய விசும்பின் ஊடு துணையுடன் விடை மேல் கொண்டார் 0399-4

41. கண்டனர் கைகள் ஆரத் தொழுதனர் கலந்த காதல் 0400-1
அண்டரும் ஏத்தினார்கள் அன்பர்தம் பெருமை நோக்கி 0400-2
விண்டு அரும் பொலிவு காட்டி விடையின் மேல் வருவார் தம்மைத் 0400-3
தொண்டரும் மனைவியாரும் தொழுது உடன் போற்றி நின்றார் 0400-4

42. மன்று உளே திருக் கூத்து ஆடி அடியவர் மனைகள் தோறும் 0401-1
சென்றவர் நிலைமை காட்டும் தேவர்கள் தேவர் தாமும் 0401-2
வென்ற ஐம் புலனால் மிக்கீர் விருப்புடன் இருக்க நம்பால் 0401-3
என்றும் இவ் இளமை நீங்காது என்று எழுந்து அருளினாரே 0401-4

43. விறல் உடைத் தொண்டனாரும் வெண் நகைச் செவ்வாய் மென் தோள் 0402-1
அறல் இயல் கூந்தல் ஆளாம் மனைவியும் அருளின் ஆர்ந்த 0402-2
திறல் உடைச் செய்கை செய்து சிவலோகம் அதனை எய்திப் 0402-3
பெறல் அரும் இளமை பெற்றுப் பேர் இன்பம் உற்றார் அன்றே 0402-4

44. அயல் அறியாத வண்ணம் அண்ணலார் ஆணை உய்த்த 0403-1
மயலில் சீர்த் தொண்டனாரை யான் அறிவகையால் வாழ்த்திப் 0403-2
புயல் வளர் மாடம் நீடும் பூம்புகார் வணிகர் பொய் இல் 0403-3
செயல் இயற் பகையார் செய்த திருத் தொண்டு செப்பல் உற்றேன் 0403-4

## 3 இயற்பகை நாயனார் புராணம்

1. சென்னி வெண்குடை நீடு அநபாயன் திருக் குலம் புகழ் பெருக்கிய சிறப்பின் 0404-1
மன்னு தொல் புகழ் மருத நீர் நாட்டு வயல் வளம் தர இயல்பினில் அளித்துப் 0404-2
பொன்னி நல் நதி மிக்க நீர் பாய்ந்து புணரி தன்னையும் புனித மாக் குவத்தோர் 0404-3
நன்னெடும் பெரும் தீர்த்த முன் உடைய நலம் சிறந்தது வளம் புகார் நகரம் 0404-4

2. அக் குலப் பதிக் குடி முதல் வணிகர் அளவு இல் செல்வத்து வளமையின் அமைந்தார் 0405-1
செக்கர் வெண் பிறைச் சடையவர் அடிமைத் திறத்தின் மிக்கவர் மறைச் சிலம்பாடியார் 0405-2
மிக்க சீர் அடியார்கள் யார் எனினும் வேண்டும் யாவையும் இல்லை என்னாதே 0405-3
இக் கடல் படி நிகழ முன் கொடுக்கும் இயல்பின் நின்றவர் உலகு இயற் பகையார் 0405-4

3. ஆறு சூடிய ஐயர் மெய் அடிமை அளவிலாத ஓர் உளம் நிறை அருளால் 0406-1
நீறு சேர் திரு மேனியார் மனத்து நினைத்த யாவையும் வினைப்பட முடித்து 0406-2
மாறு இலாத நன் நெறியினில் விளங்கும் மனை அறம் புரி மகிழ்ச்சியின் வந்த 0406-3
பேறு எலாம் அவர் ஏவின செய்யும் பெருமையே எனப் பேணி வாழ் நாளில் 0406-4

4. ஆயும் நுண் பொருள் ஆகியும் வெளியே அம்பலத்து உள் நின்று ஆடுவார் உம்பர் 0407-1
நாயகிக்கும் அஃது அறியவோ பிரியா நங்கைதான் அறியாமையோ அறியோம் 0407-2
தூய நீறு பொன் மேனியில் விளங்கத் தூர்த்த வேடமும் தோன்ற வேதியராய் 0407-3
மாய வண்ணமே கொண்டு தம் தொண்டர் மாறாத வண்ணமும் காட்டுவான் வந்தார் 0407-4

5. வந்து தண் புகார் வணிகர் தம் மறுகின் மருங்கு இயற் பகையார் மனை புகுத 0408-1
எந்தை எம்பிரான் அடியவர் அணைந்தார் என்று நின்றதோர் இன்ப ஆதரவால் 0408-2

சிந்தை அன்பொடு சென்று எதிர் வணங்கிச் சிறப்பின் மிக்க அர்ச்சனைகள் முன் செய்து
0408-3
முந்தை எம் பெரும் தவத்தினால் என்கே முனிவர் இங்கு எழுந்து அருளியது என்றார்
0408-4

6. என்று கூறிய இயற்பகையார் முன் எய்தி நின்ற அக் கைதவ மறையோர் 0409-1
கொன்ற வார் சடையார் அடியார்கள் குறித்து வேண்டின குணம் எனக் கொண்டே
0409-2
ஒன்றும் நீர் எதிர் மறாது உவந்து அளிக்கும் உண்மை கேட்டு நும் பால் ஒன்று வேண்டி
0409-3
இன்று நான் இங்கு வந்தனன் அதனுக்கு இசையலாம் எனில் இயம்பலாம் என்றார்
0409-4

7. என்ன அவ் உரை கேட்டு இயற்பகையார் யாதும் ஒன்றும் என் பக்கல் உண்டாகில்
0410-1
அன்னது எம்பிரான் அடியவர் உடைமை ஐயம் இல்லை நீர் அருள் செயும் என்ன
0410-2
மன்னு காதல் உன் மனைவியை வேண்டி வந்தது இங்கு என அங்கணர் எதிரே
0410-3
சொன்ன போதிலும் முன்னையின் மகிழ்ந்து தூய தொண்டனார் தொழுது உரை செய்வார்
0410-4

8. இது எனக்கு முன்பு உள்ளதே வேண்டி எம் பிரான் செய்த பேறு எனக்கு என்னாக்
0411-1
கது மெனச் சென்று தம் மனைவாழ் வாழ்க்கை கற்பின் மேம்படு காதலி யாரை
0411-2
விதி மணக் குல மடந்தை இன்று உனை இம் மெய்த் தவர்க்கு நான் கொடுத்தனன் என்ன
0411-3
மது மலர்க் குழலாள் மனைவியார் கலங்கி மனம் தெளிந்த பின் மற்று இது மொழிவார்
0411-4

9. இன்று நீர் எனக்கு அருள் செய்தது இதுவேல் என உயிர்க்கு ஒரு நாத நீர் உரைத்தது
0412-1
ஒன்றை நான் செய்ம் அத்தனை அல்லால் உரிமை வேறு உளதோ எனக்கு என்று
0412-2
தன் பெரும் கணவரை வணங்கத் தாழ்ந்து தொண்டனார் தாம் எதிர் வணங்க 0412-3
சென்று மாதவன் சேவடி பணிந்து திகைத்து நின்றனள் திருவினும் பெரியாள் 0412-4

10. மாது தன்னை முன் கொடுத்த மாதவர் மனம் மகிழ்ந்து பேர் உவகையின் மலர்ந்தே
0413-1
யாது நான் இனிச் செய் பணி என்றே இறைஞ்சி நின்றவர் தம் எதிர் நோக்கி 0413-2
சாதி வேதியர் ஆகிய தலைவர் தையல் தன்னை யான் தனிக் கொடு போகக் 0413-3
காதல் மேவிய சுற்றமும் பதியும் கடக்க நீ துணை போதுக என்றார் 0413-4

11. என்று அவர் அருளிச் செய்ய யானே முன் செய் குற்றேவல் 0414-1
ஒன்றிது தன்னை என்னை உடையவர் அருளிச் செய்ய 0414-2
நின்றது பிழை ஆம் என்று நினைந்து வேறு இடத்துப் புக்குப் 0414-3
பொன் திகழ் அறுவை சாத்தி பூம் கச்சுப் பொலிய வீக்கி 0414-4

12. வாள் ஒடு பலகை ஏந்தி வந்து எதிர் வணங்கி மிக்க 0415-1
ஆள் அரி ஏறு போல்வார் அவரை முன் போக்கிப் பின்னே 0415-2
தோள் இணை துணையே ஆகப் போயினார் துன்னினாரை 0415-3
நீள் இடைப் பட முன் கூடி நிலத்திடை வீழ்த்த நேரவார் 0415-4

13. மனைவியார் சுற்றத்தாரும் வள்ளலார் சுற்றத்தாரும் 0416-1
இனையது ஒன்றி யாரே செய்தார் இயற்பகை பித்தன் ஆனால் 0416-2
புனை இழை தன்னைக் கொண்டு போவதாம் ஒருவன் என்று 0416-3
துனை பெரும் பழியை மீட்பான் தொடர்வதற்கு எழுந்து சூழ்வார் 0416-4

14. வேல் ஒடு வில்லும் வாளும் சுரிகையும் எடுத்து மிக்க 0417-1
கால் என விசையில் சென்று கடிநகர் புறத்துப் போகிப் 0417-2
பால் இரு மருங்கும் ஈண்டிப் பரந்த ஆர்வம் பொங்க 0417-3
மால் கடல் கிளர்ந்தது என்ன வந்து எதிர் வளைத்துக் கொண்டார் 0417-4

15. வழி விடும் துணை பின் போத வழித்துணை ஆகி உள்ளார் 0418-1
கழி பெரும் காதல் காட்டிக் காரிகை உடன் போம் போதில் 0418-2
அழிதகன் போகேல் ஈண்டு அவ் அருங் குலக் கொடியை விட்டுப் 0418-3
பழிவிட நீ போ என்று பகர்ந்து எதிர் நிரந்து வந்தார் 0418-4

16. மறை முனி அஞ்சினான் போல் மாதினைப் பார்க்க மாதும் 0419-1
இறைவனே அஞ்ச வேண்டாம் இயற்பகை வெல்லும் என்ன 0419-2
அறை கழல் அண்ணல் கேளா அடியனேன் அவரை எல்லாம் 0419-3
தறை இடைப் படுத்துகின்றேன் தளர்ந்து அருள் செய்யேல் என்று 0419-4

17. பெரு விறல் ஆளி என்னப் பிறங்கு எரி சிதற நோக்கிப் 0420-1
பரிபவப் பட்டு வந்த படர் பொரும் சுற்றத் தாரை 0420-2
ஒருவரும் எதிர் நில்லாமே ஓடிப் போய்ப் பிழையும் அன்றேல் 0420-3
எரி சுடர் வாளில் கூறாய்த் துடிக்கின்றீர் என்று நேர்ந்தார் 0420-4

18. ஏடா நீ என் செய்தாய் ஆல் இத்திறம் இயம்பு கின்றாய் 0421-1
நாடு உறு பழியும் ஒன்னார் நகையையும் நாணாய் இன்று 0421-2
பாடு அவம் உரைப்பது உன்றன் மனைவியைப் பனவற்கு ஈந்தோ 0421-3
கூடவே மடிவது அன்றிக் கொடுக்க யாம் ஒட்டோம் என்றார் 0421-4

19. மற்று அவர் சொன்ன மாற்றம் கேட்டலும் மனத்தின் வந்த 0422-1
செற்றம் முன் பொங்க உங்கள் உடல் துணி எங்கும் சிந்தி 0422-2
முற்று நும் உயிரை எல்லாம் முதல் விசும்பு ஏற்றிக் கொண்டு 0422-3
நற்றவர் தம்மைப் போக விடுவேன் என்று எழுந்தார் நல்லோர் 0422-4

20. நேர்ந்தவர் எதிர்ந்த போது நிறைந்த அச் சுற்றத்தாரும் 0423-1
சார்ந்து அவர் தம் முன் செல்லார் தையலைக் கொண்டு பெற்றம் 0423-2
ஊர்ந்தவர் படிமேற் செல்ல உற்று எதிர் உடன்று பொங்கி 0423-3
ஆர்ந்த வெம் சினத்தால் மேல் சென்று அடர்ந்து எதிர் தடுத்தார் 0423-4

21. சென்று அவர் தடுத்த போதில் இயற்பகையார் முன் சீறி 0424-1
வன் துணை வாளே யாகச் சாரிகை மாறி வந்து 0424-2
துன்றினர் தோளும் தாளும் தலைகளும் துணித்து வீழ்த்து 0424-3
வென்று அடு புலி யேறு அன்ன அமர் விளையாட்டில் மிக்கார் 0424-4

22. மூண்டு முன் பலராய் வந்தார் தனி வந்து முட்டினார்கள் 0425-1
வேண்டிய திசைகள் தோறும் வேறு வேறு அமர் செய் போழ்தில் 0425-2
ஆண் தகை வீரர் அனைவர்க்கும் அனைவர் ஆகிக் 0425-3
காண் தகு விசையில் பாய்ந்து கலந்து முன் துணித்து வீழ்ந்தார் 0425-4

23. சொரிந்தன குடல்கள் எங்கும் துணிந்தன உடல்கள் எங்கும் 0426-1
விரிந்தன தலைகள் எங்கும் மிடைந்தன கழுகும் எங்கும் 0426-2
எரிந்தன விழிகள் எங்கும் எதிர்ப்பவர் ஒருவர் இன்றித் 0426-3
திரிந்தனர் களனில் எங்கும் சிவன் கழல் புனைந்த வீரர் 0426-4

24. மாடு அலை குருதி பொங்க மடிந்த செம் களத்தின் இன்றும் 0427-1
ஆடு உறு செயலின் வந்த கிளைஞரோடு அணைந்தார் தம்மில் 0427-2
ஓடினார் உள்ளார் உய்ந்தார் ஒழிந்தவர் ஒழிந்தே மாண்டார் 0427-3
நீடிய வாளும் தாமும் நின்றவர் தாமே நின்றார் 0427-4

25. திரு உடை மனைவியாரைக் கொடுத்து இடைச் செறுத்து முன்பு 0428-1
வரு பொரும் சுற்றம் எல்லாம் வாளினால் துணித்து மாட்டி 0428-2

அரு மறை முனியை நோக்கி அடிகள் நீர் அஞ்சா வண்ணம் 0428-3
பொரு அருங் கானம் நீங்க விடுவன் என்று உடனே போந்தார் 0428-4

26. இருவர் ஆல் அறிய ஒண்ணா ஒருவர் பின் செல்லும் ஏழை 0429-1
பொரு திறல் வீரர் பின்பு போக முன் போகும் போதில் 0429-2
அரு மறை முனிவன் சாய்க்காடு அதன் மருங்கு அணைய மேவித் 0429-3
திரு மலி தோளினானை மீள் எனச் செப்பினான் ஏ 0429-4

27. தவ முனி தன்னை மீளச் சொன்ன பின் தலையால் ஆர 0430-1
அவன் மலர்ப் பதங்கள் சூடி அஞ்சலி கூப்பி நின்று 0430-2
புவனம் மூன்று உய்ய வந்த பூசுரன் தன்னை ஏத்தி 0430-3
இவன் அருள் பெறப் பெற்றேன் என்று இயற் பகையாரும் மீண்டார் 0430-4

28. செய்வதற்கு அரிய செய்கை செய்த நல் தொண்டர் போக 0431-1
மை திகழ் கண்டன் எண் தோள் மறையவன் மகிழ்ந்து நோக்கிப் 0431-2
பொய் தரும் உள்ளம் இல்லான் பார்க்கிலன் போனான் என்று 0431-3
மெய் தரு சிந்தையாரை மீளவும் அழைக்கல் உற்றான் 0431-4

29. இயற் பகை முனிவா ஓலம் ஈண்டு நி வருவாய் ஓலம் 0432-1
அயர்ப்பு இலாதானே ஓலம் அன்பனே ஓலம் ஓலம் 0432-2
செயர்கு அரும் செய்கை செய்த தீரனே ஓலம் என்றான் 0432-3
மயக்கு அறு மறை ஓலிட்டு மால் அயன் தேட நின்றான் 0432-4

30. அழைத்த பேர் ஓசை கேளா அடியனேன் வந்தேன் வந்தேன் 0433-1
பிழைத்தவர் உளரேல் இன்னும் பெரு வலி தடக்கை வாளின் 0433-2
இழைத்தவர் ஆகின்றார் என்று இயற்பகையார் வந்து எய்தக் 0433-3
குழைப் பொலி காதினானும் மறைந்தனன் கோலம் கொள்வான் 0433-4

31. சென்றவர் முனியைக் காணார் சே இழை தன்னைக் கண்டார் 0434-1
பொன் திகழ் குன்று வெள்ளிப் பொருப்பின் மேல் பொலிந்தது என்ன 0434-2
தன் துணை உடனே வானில் தலைவனை விடை மேல் கண்டார் 0434-3
நின்று இலர் தொழுது வீழ்ந்தார் நிலத்தினின்று எழுந்தார் நேர்ந்தார் 0434-4

32. சொல்லுவது அறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி 0435-1
வல்லை வந்து அருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி 0435-2
எல்லை இல் இன்ப வெள்ளம் எனக்கு அருள் செய்தாய் போற்றி 0435-3
தில்லை அம்பலத்து உள் ஆடும் சேவடி போற்றி என்ன 0435-4

33. விண் இடை நின்ற வெள்ளை விடையவர் அடியார் தம்மை 0436-1
எண்ணீய உலகு தன்னில் இப்படி நம்பால் அன்பு 0436-2
பண்ணிய பரிவு கண்டு மகிழ்ந்தனம் பழுது இலாதாய் 0436-3
நண்ணிய மனைவி யோடு நம்முடன் போதுக என்று 0436-4

34. திருவளர் சிறப்பின் மிக்க திருத் தொண்டர் தமக்கும் தோற்றம் 0437-1
மருவிய தெய்வக் கற்பின் மனைவியார் தமக்கும் தக்க 0437-2
பெருகிய அருளின் நீடு பேறு அளித்து இமையோர் ஏத்தப் 0437-3
பொரு விடைப் பாகர் மன்னும் பொற் பொது அதனுள் புக்கார் 0437-4

35. வானவர் பூவின் மாரி பொழிய மா மறைகள் ஆர்ப்ப 0438-1
ஞான மா முனிவர் போற்ற நல மிகு சிவலோகத்தில் 0438-2
ஊனம் இல் தொண்டர் கும்பிட்டு உடன் உறை பெருமை பெற்றார் 0438-3
ஏனைய சுற்றத்தாரும் வானிடை இன்பம் பெற்றார் 0438-4

36. இன்பு உறு தாரம் தன்னை ஈசனுக்கு அன்பர் என்றே 0439-1
துன்பு உறாது உதவும் தொண்டர் பெருமையைத் தொழுது வாழ்த்தி 0439-2
அன்பு உறு மனத்தால் நாதன் அடியவர்க்கு அன்பு நீடு 0439-3
மன் புகழ் இளைசை மாறன் வளத்தினை வழுத்தல் உற்றேன் 0439-4

4 இளையான் குடி மாற நாயனார் புராணம்

1. அம் பொன் நீடிய அம்பலத்தினில் ஆடுவார் அடி சூடுவார் 0440-1
தம்பிரான் அடிமைத் திறத்து உயர் சால்பின் மேன்மை தரித்து உளார் 0440-2
நம்பு வாய்மையில் நீடு சூத்திர நற் குலம் செய் தவத்தினால் 0440-3
இம்பர் ஞாலம் விளக்கினார் இளையான் குடிப் பதி மாறனார் 0440-4

2. ஏரின் மல்கு வளத்தினால் வரும் எல்லை இல்லது ஓர் செல்வமும் 0441-1
நீரின் மல்கிய வேணியார் அடியார் திறத்து நிறைந்தது ஓர் 0441-2
சீரின் மல்கிய அன்பின் மேன்மை திருந்த மன்னிய சிந்தையும் 0441-3
பாரின் மல்க விரும்பி மற்றவை பெற்ற நீடு பயன் கொள்வார் 0441-4

3. ஆரம் என்பு புனைந்த ஐயர் தம் அன்பர் என்பது ஓர் தன்மையால் 0442-1
நேர வந்தவர் யாவர் ஆயினும் நித்தம் ஆகிய பத்தி முன் 0442-2
கூர வந்து எதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப் புலத்து 0442-3
ஈரம் மென் மதுரப் பதம் பரிவு எய்த முன்னுரை செய்தபின் 0442-4

4. கொண்டு வந்து மனைப் புகுந்து குலாவு பாதம் விளக்கியே 0443-1
மண்டு காதலின் ஆதனத்து இடைவைத்து அருச்சனை செய்த பின் 0443-2
உண்டி நாலு விதத்தில் ஆறு சுவைத் திறத்தினில் ஒப்பு இலா 0443-3
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய அளித்துளார் 0443-4

5. ஆளும் நாயகர் அன்பர் ஆனவர் அளவு இலார் உளம் மகிழவே 0444-1
நாளும் நாளும் நிறைந்து வந்து நுகர்ந்த தன்மையின் நன்மையால் 0444-2
நீளும் மா நிதியின் பரப்பு நெருங்கு செல்வம் நிலாவி எண் 0444-3
தேளினார் அளகைக்கு இருத்திய தோழனார் என வாழும் நாள் 0444-4

6. செல்வம் மேவிய நாளில் இச்செயல் செய்வது அன்றியும் மெய்யினால் 0445-1
அல்லல் நல்குரவு ஆன போதினும் வல்லர் என்று அறிவிக்கவே 0445-2
மல்லல் நீடிய செல்வம் மெல்ல மறைந்து நாள் தொறும் மாறி வந்து 0445-3
ஒல்லையில் வறுமைப் பதம் புக உன்னினார் தில்லை மன்னினார் 0445-4

7. இன்னவாறு வளம் சுருங்கவும் எம்பிரான் இளையான் குடி 0446-1
மன்னன் மாறன் மனம் சுருங்குதல் இன்றி உள்ளன மாறியும் 0446-2
தன்னை மாறி இறுக்க உள்ள கடன்கள் தக்கன கொண்டு பின் 0446-3
முன்னை மாறு இல் திருப்பணிக் கண் முதிர்ந்த கொள்கையின் ஆயினார் 0446-4

8. மற்று அவர் செயல் இன்ன தன்மையது ஆக மால் அயன் ஆன அக் 0447-1
கொற்ற ஏனமும் அன்னமும் தெரியாத கொள்கையர் ஆயினர் 0447-2
பெற்றம் ஊர்வதும் இன்றி நீடிய பேதையாளுடன் இன்றி ஓர் 0447-3
நல் தவத்தவர் வேடமே கொடு ஞாலம் உய்ந்திட நண்ணினார் 0447-4

9. மாரிக் காலத்து இரவினில் வைகி ஓர் 0448-1
தாரிப்பு இன்றிப் பசி தலைக் கொள்வது 0448-2
பாரித்து இல்லம் அடைந்த பின் பண்பு அற 0448-3
வேரித்து ஆரான் விருந்து எதிர் கொண்டனன் 0448-4

10. ஈர மேனியை நீக்கி இடம் கொடுத்து 0449-1
ஆர இன் அமுது ஊட்டுதற்கு ஆசையால் 0449-2
தார மாதரை நோக்கித்தபோதனர் 0449-3
தீரவே பசித்தார் செய்வது என் என்று 0449-4

11. நமக்கு முன்பு இங்கு உணவிலை ஆயினும் 0450-1
இமக் குலக்கொடி பாகர்க்கு இனியவர் 0450-2
தமக்கு நாம் இன் அடிசில் தகவு உற 0450-3
அமைக்கு மாறு எங்ஙனே அணங்கே என 0450-4

12. மாது கூறுவாள் மற்று ஒன்றும் காண்கிலேன் 0451-1

ஏதிலாரும் இனித் தருவார் இல்லை 0451-2
போதும் வைகிற்றுப் போம் இடம் வேறு இலை 0451-3
தீது செய்வினை யேற்கு என் செயல் 0451-4

13. செல்லல் நீங்கப் பகல் வித்திய செம் நெல் 0452-1
மல்லல் நீர் முளை வாரிக் கொடு வந்தால் 0452-2
வல்லவாறு அமுது ஆக்கலும் ஆகும் மற்று 0452-3
அல்லது ஒன்று அறியேன் என்று அயர்வு உற 0452-4

14. மற்ற மாற்றம் மனைவியார் கூற முன் 0453-1
பெற்ற செல்வம் எனப் பெரிது உள் மகிழ்ந்து 0453-2
உற்ற காதலினால் ஒருப் பட்டனர் 0453-3
சுற்று நீர் வயல் செல்லத் தொடங்கினார் 0453-4

15. பெருகு வானம் பிறங்க மழை பொழிந்து 0454-1
அருகு நாப்பண் அறிய அரும் கங்குல் தான் 0454-2
கருகு மை இருளின் கணம் கட்டு விட்டு 0454-3
உருகு கின்றது போன்றது உலகு எலாம் 0454-4

16. எண்ணும் இவ் உலகத்தவர் யாவரும் 0455-1
துண் எனம்படி தோன்ற முன் தோன்றிடில் 0455-2
வண்ணம் நீடிய மைக்குழம்பு ஆம் என்று 0455-3
நண்ணல் செய்யாது நடு இருள் யாமத்து 0455-4

17. உள்ளம் அன்பு கொண்டு ஓர் பேர் இடாக் 0456-1
கொள்ள முன் கவித்துக் குறியின் வழிப் 0456-2
புள்ளும் உறங்கும் வயல் புகப் போயினார் 0456-3
வள்ளலார் இளையான் குடி மாறனார் 0456-4

18. காலினால் தடவிச் சென்று கைகளால் 0457-1
சாலி வெண் முளை நீர் வழிச் சார்ந்தன 0457-2
கோலி வாரி இடா நிறையக் கொண்டு 0457-3
மேல் எடுத்துச் சுமந்து ஒல்லை மீண்டார் 0457-4

19. வந்த பின் மனைவியாரும் வாய்தலின் நின்று வாங்கிச் 0458-1
சிந்தையில் விரும்பி நீரில் சேற்றினை அலம்பி ஊற்றி 0458-2
வெம் தழல் அடுப்பின் மூட்ட விறகு இல்லை என்ன மேலோர் 0458-3
அந்தம் இல் மனையில் நீடும் அலகினை அறுத்து வீழ்த்தார் 0458-4

20. முறித்து அவை அடுப்பின் மாட்டி முளை வித்துப் பதம் முன் கொள்ள 0459-1
வறுத்த பின் அரிசியாக்கி வாக்கிய உலையில் பெய்து 0459-2
வெறுப்பு இல் இன் அடிசில் ஆக்கிமேம் படு கற்பின் மிக்கார் 0459-3
கறிக்கு இனி என் செய்கோம் என்று இறைஞ்சினார் கணவனாரை 0459-4

21. வழி வரும் இளைப்பின் ஓடும் வருத்திய பசியினால் ஏ 0460-1
அழி உறும் ஐயன் என்னும் அன்பினில் பொலிந்து சென்று 0460-2
குழி நிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப் 0460-3
பழி முதல் பறிப்பார் போலப் பறித்து அவை கறிக்கு நல்க 0460-4

22. மனைவியார் கொழுநர் தந்த மனம் மகிழ் கறிகள் ஆய்ந்து 0461-1
புனல் இடைக் கழுவித் தக்க புனித பாத்திரத்துக் கைம்மை 0461-2
வினையினால் வேறு வேறு கறி அமுது ஆக்கிப் பண்டை 0461-3
நினைவினால் குறையை நேர்ந்து திருவமுது அமைத்து நின்று 0461-4

23. கணவனார் தம்மை நோக்கிக் கறி அமுது ஆன காட்டி 0462-1
இணை இலாதாரை ஈண்ட அமுது செய்விப்போம் என்ன 0462-2
உணவினால் உணர ஒண்ணா ஒருவரை உணர்த்த வேண்டி 0462-3
அணைய முன் சென்று நின்று அங்கு அவர் துயில் அகற்றல் உற்றார் 0462-4

24. அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால் 0463-1
எழுந்தருள் பெரியோய் ஈண்டு அமுது செய்து அருள்க என்று 0463-2
தெழும்பனார் உரைத்த போதில் சோதியாய் எழுந்துத் தோன்றச் 0463-3
செழும் திரு மனைவியாரும் தொண்டரும் திகைத்து நின்றார் 0463-4

25. மால் அயற்கு அரிய நாதன் வடிவு ஒரு சோதி ஆகச் 0464-1
சாலவே மயங்குவார்க்குச் சங்கரன் தான் மகிழ்ந்தே 0464-2
ஏலவார் குழலாள் தன்னோடு இடப வாகனன் ஆய்த் தோன்றிச் 0464-3
சீலம் ஆர் பூசை செய்த திருத் தொண்டர் தம்மை நோக்கி 0464-4

26. அன்பனே அன்பர் பூசை அளித்த நீ அணங்கினோடும் 0465-1
என் பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன் தானே 0465-2
முன் பெரு நிதியம் ஏந்தி மொழி வழி ஏவல் கேட்ப 0465-3
இன்பம் ஆர்ந்து இருக்க என்றே செய்தான் எவர்க்கும் மிக்கான் 0465-4

27. இப்பரிசு இவர்க்குத் தக்க வகையினால் இன்பம் நல்கி 0466-1
முப்புரம் செற்றார் அன்பர் முன்பு எழுந்து அருளிப் போனார் 0466-2
அப் பெரியவர் தம் தூய அடி இணை தலை மேல் கொண்டு 0466-3
மெய்ப் பொருள் சோதி வேந்தன் செயலினை விளம்பல் உற்றேன் 0466-4

5 மெய்ப் பொருள் நாயனார் புராணம்
1. சேதி நல் நாட்டு நீடு திருக் கோவலூரின் மன்னி 0467-1
மாது ஒரு பாகர் அன்பின் வழி வரு மலாடர் கோமான் 0467-2
வேத நல் நெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு 0467-3
காதலால் ஈசர்க்கு அன்பர் கருத்து அறிந்து ஏவல் செய்வார் 0467-4

2. அரசியல் நெறியின் வந்த அறநெறி வழாமல் காத்து 0468-1
வரை நெடும் தோளால் வென்று மாற்றலர் முனைகள் மாற்றி 0468-2
உரை திறம்பாத நீதி நீர்மை யினின் மிக்கார் 0468-3
திரை செய் நீர்ச்சடையான் அன்பர் வேடமே சிந்தை செய்வார் 0468-4

3. மங்கையைப் பாகமாக உடையவர் மன்னும் கோயில் 0469-1
எங்கணும் பூசை நீடி ஏழ் இசைப் பாடல் ஆடல் 0469-2
பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார் 0469-3
தங்கள் நாயகருக்கு அன்பர் தான் அலால் சார்பு ஒன்று இல்லார் 0469-4

4. தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள் 0470-1
ஆடிய பெருமான் அன்பர்க்கு ஆவன ஆகும் என்று 0470-2
நாடிய மனத்தினோடு நாயன்மார் அணைந்த போது 0470-3
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவு அறக் கொடுத்து வந்தார் 0470-4

5. இன்னவாறு ஒழுகும் நாளில் இகல் திறம் புரிந்து ஓர் மன்னன் 0471-1
அன்னவர் தம்மை வெல்லும் ஆசையால் அமர் மேற்கொண்டு 0471-2
பொன் அணி ஓடை யானைப் பொரு பரி காலாள் மற்றும் 0471-3
பன் முறை இழந்து தோற்றுப் பரிபவப் பட்டுப் போனான் 0471-4

6. இப்படி இழந்த மாற்றான் இகலினால் வெல்ல மாட்டான் 0472-1
மெய்ப் பொருள் வேந்தன் சீலம் அறிந்து வெண் நீறு சாத்தும் 0472-2
அப்பெரு வேடம் கொண்டே அற்றத்தில் வெல்வான் ஆகச் 0472-3
செப்ப அரும் நிலைமை எண்ணித் திருக் கோவலூரில் சேர்வான் 0472-4

7. மெய் எல்லாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக் 0473-1
கையினில் படை கரந்த புத்தகக் கவளி ஏந்தி 0473-2
மை பொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்பு வைத்துப் 0473-3
பொய் தவ வேடம் கொண்டு புகுந்தனன் முத்த நாதன் 0473-4

8. மா தவ வேடம் கொண்ட வன்கணான் மாடம் தோறும் 0474-1
கோதை சூழ் அளக பாரக் குழைக் கொடி ஆட மீது 0474-2
சோதி வெண் கொடிகள் ஆடும் சுடர் நெடு மறுகில் போகிச் 0474-3
சேதிர் பெருமான் கோயில் திருமணி வாயில் சேர்ந்தான் 0474-4

9. கடை உடைக் காவலாளர் கை தொழுது ஏற நின்றே 0475-1
உடையவர் தாமே வந்தார் உள் எழுந்து அருளும் என்னத் 0475-2
தடை பல புக்க பின்பு தனித் தடை நின்ற தத்தன் 0475-3
இடை தெரிந்து அருள வேண்டும் துயில் கொள்ளும் இறைவன் என்றான் 0475-4

10. என்று அவன் கூறக் கேட்டே யான் அவற்கு உறுதி கூற 0476-1
நின்றிடு நீயும் என்றே அவனையும் நீக்கிப் புக்குப் 0476-2
பொன் திகழ் பள்ளிக் கட்டில் புரவலன் துயில மாடே 0476-3
மன்றல் அம் குழல் மென் சாயல் மா தேவி இருப்பக் கண்டான் 0476-4

1.1 கண்டு சென்று அணையும் போது கதும் என இழிந்து தேவி 0477-1
வண்டு அலர் மாலையானை எழுப்பிட உணர்ந்து மன்னன் 0477-2
அண்டர் நாயகனார் தொண்டர் ஆம் எனக் குவித்த செம் கை 0477-3
கொண்டு எழுந்து எதிரே சென்று கொள்கையின் வணங்கி நின்று 0477-4

12. மங்கலம் பெருக மற்று என் வாழ்வு வந்து அணைந்தது என்ன 0478-1
இங்கு எழுந்து அருளப் பெற்றது என் கொலோ என்று கூற 0478-2
உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த ஆகம நூல் மண்மேல் 0478-3
எங்கும் இலாதது ஒன்று கொடு வந்தேன் இயம்ப என்றான் 0478-4

13. பேறு எனக்கு இதன் மேல் உண்டோ பிரான் அருள் செய்த இந்த 0479-1
மாறு இல் ஆகமத்தை வாசித்து அருள வேண்டும் என்ன 0479-2
நாறு பூம் கோதை மாது தவிரவே நானும் நீயும் 0479-3
வேறு இடத்து இருக்க வேண்டும் என்று அவன் விளம்ப வேந்தன் 0479-4

14. திருமகள் என்ன நின்ற தேவியார் தம்மை நோக்கிப் 0480-1
பரிவுடன் விரைய அந்தப்புரத்திடைப் போக ஏவித் 0480-2
தரு தவ வேடத்தானைத் தவிசின் மேல் இருத்தித் தாமும் 0480-3
இரு நிலத்து இருந்து போற்றி இனி அருள் செய்யும் என்றான் 0480-4

15. கைத் தலத்து இருந்த வஞ்சக் கவளிகை மடி மேல் வைத்துப் 0481-1
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்த அவர் வணங்கும் போதில் 0481-2
பத்திரம் வாங்கித் தான் முன் நினைத்த அப் பரிசே செய்ய 0481-3
மெய்த் தவ வேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது வென்றார் 0481-4

16. மறைத்தவன் புகுந்த போதே மனம் அங்கு வைத்த தத்தன் 0482-1
இறைப் பொழுதின் கண் கூடி வாளினால் எறியல் உற்றான் 0482-2
நிறைத்த செம் குருதி சோர வீழ்கின்றார் நீண்ட கையால் 0482-3
தறைப் படும் அளவில் தத்தா நமர் எனத் தடுத்து வீழ்ந்தார் 0482-4

17. வேதனை எய்தி வீழ்ந்த வேந்தரால் விலக்கப் பட்ட 0483-1
தாதன் ஆம் தத்தன் தலையினால் வணங்கித் தாங்கி 0483-2
யாது நான் செய்கேன் என்ன எம்பிரான் அடியார் போக 0483-3
மீது இடை விலக்கா வண்ணம் கொண்டு போய் விடு நீ என்றார் 0483-4

18. அத் திறம் அறிந்தார் எல்லாம் அரசனைத் தீங்கு செய்த 0484-1
பொய்த் தவன் தன்னைக் கொல்வோம் எனப் புடை சூழ்ந்த போது 0484-2
தத்தனும் அவரை எல்லாம் தடுத்து உடன் கொண்டு போவான் 0484-3
இத் தவன் போகப் பெற்றது இறைவனது ஆணை என்றான் 0484-4

19. அவ்வழி அவர்கள் எல்லாம் அஞ்சியே அகன்று நீங்கச் 0485-1
செவ்விய நெறியில் தத்தன் திருநகர் கடந்து போந்து 0485-2
கை வடி நெடுவாள் ஏந்தி ஆள் உறாக் கானம் சேர 0485-3

வெவ் வினைக் கொடியோன் தன்னை விட்ட பின் மீண்டு போந்தான் 0485-4

20. மற்று அவன் கொண்டு போன வஞ்சனை வேடத்தான் மேல் 0486-1
செற்றவர் தம்மை நீக்கித் தீது இலா நெறியில் விட்ட 0486-2
சொல் திறம் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவி தாங்கும் 0486-3
கொற்றவன் முன்பு சென்றான் கோமகன் குறிப்பில் நின்றான் 0486-4

21. சென்று அடி வணங்கி நின்று செய் தவ வேடம் கொண்டு 0487-1
வென்றவற்கு இடையூறு இன்றி விட்டனன் என்று கூற 0487-2
இன்று எனக்கு ஐயன் செய்தது யார் செய வல்லார் என்று 0487-3
நின்றவன் தன்னை நோக்கி நிறை பெரும் கருணை கூர்ந்தார் 0487-4

2.2 அரசியல் ஆயத்தார்க்கும் அழவு உறும் காதலார்க்கும் 0488-1
விரவிய செய்கை தன்னை விளம்புவார் விதியினாலே 0488-2
பரவிய திரு நீற்று அன்பு பாது காத்து உய்ப்பீர் என்று 0488-3
புரவலர் மன்றுள் ஆடும் பூம் கழல் சிந்தை செய்தார் 0488-4

23. தொண்டனார்க்கு இமயப் பாவை துணைவனார் அவர் முன் தம்மைக் 0489-1
கண்டவாறு எதிரே நின்று காட்சி தந்தருளி மிக்க 0489-2
அண்டர் வானவர் கட்கு எட்டா அருள் கழல் நீழல் சேரக் 0489-3
கொண்டவாறு இடை அறாமல் கும்பிடும் கொள்கை ஈந்தார் 0489-4

24. இன் உயிர் செகுக்கக் கண்டும் எம்பிரான் அன்பர் என்றே 0490-1
நன் நெறி காத்த சேதி நாதனார் பெருமை தன்னில் 0490-2
என் உரை செய்தேன் ஆக இகல் விறன் மிண்டர் பொன் தாள் 0490-3
சென்னி வைத்து அவர் முன் செய்த திருத் தொண்டு செப்பல் உற்றேன் 0490-4

6 விறன்மிண்ட நாயனார் புராணம்

1. விரை செய் நறும் பூம் தொடை இதழி வேணியார் தம் கழல் பரவிப் 0491-1
பரசுபெறு மா தவ முனிவன் பரசு ராமன் பெறு நாடு 0491-2
திரை செய் கடலின் பெருவளவனும் திருந்து நிலனின் செழு வளனும் 0491-3
வரையின் வளனும் உடன் பெருகி மல்கு நாடு மலை நாடு 0491-4

2. வாரி சொரியும் கதிர் முத்தும் வயல்மென் கரும்பில் படு முத்தும் 0492-1
வேரல் விளையும் குளிர் முத்தும் வேழ மருப்பின் ஒளிர் முத்தும் 0492-2
மூரல் எனச் சொல் வெண் முத்த நகையார் தெரிந்து முறை கோக்கும் 0492-3
சேரர் திரு நாட்டு ஊர்களின் முன் சிறந்த மூதூர் செங்குன்றூர் 0492-4

3. என்னும் பெயரின் விளங்கி உலகேறும் பெருமை உடையது தான் 0493-1
அன்னம் பயிலும் வயல் உழவின் அமைந்த வளத்தால் ஆய்ந்த மறை 0493-2
சொன்ன நெறியின் வழி ஒழுகும் தூய குடிமைத் தலை நின்றார் 0493-3
மன்னும் குலத்தின் மா மறை நூல் மரபிற் பெரியோர் வாழ் பதியாம் 0493-4

4. அப் பொன் பதியின் இடை வேளாண் குலத்தை விளக்க அவதரித்தார் 0494-1
செப்பற்கு அரிய பெரும் சீர்த்திச் சிவனார் செய்ய கழல் பற்றி 0494-2
எப் பற்றினையும் அற எறிவார் எல்லை தெரிய ஒண்ணாதார் 0494-3
மெய்ப் பத்தர்கள் பால் பரிவுடையார் எம்பிரானார் விறன் மிண்டர் 0494-4

5. நதியும் மதியும் புனைந்த சடை நம்பர் விரும்பி நலம் சிறந்த 0495-1
பதிகள் எங்கும் கும்பிட்டுப் படரும் காதல் வழிச் செல்வார் 0495-2
முதிரும் அன்பில் பெரும் தொண்டர் முறைமை நீடு திருக் கூட்டத்து 0495-3
எதிர் முன் பரவும் அருள் பெற்றே இறைவர் பாதம் தொழப் பெற்றார் 0495-4

6. பொன் தாழ் அருவி மலைநாடு கடந்து கடல் சூழ் புவி எங்கும் 0496-1
சென்று ஆள் உடையார் அடியவர் தம் திண்மை ஒழுக்க நடை செலுத்தி 0496-2
வன் தாள் மேருச் சிலை வளைத்துப் புரங்கள் செற்ற வைதிகத் தேர் 0496-3
நின்றார் இருந்த திருவாரூர் பணிந்தார் நிகர் ஒன்று இல்லாதார் 0496-4

7. திருவார் பெருமை திகழ்கின்ற தேவ ஆசிரியன் இடைப் பொலிந்து 0497-1
மருவா நின்ற சிவனடியார் தம்மைத் தொழுது வந்து அணையாது 0497-2
ஒருவாறு ஒதுங்கும் வன் தொண்டன் புறகென்று உரைப்பச் சிவன் அருளால் 0497-3
பெருகா நின்ற பெரும் பேறு பெற்றார் மற்றும் பெற நின்றார் 0497-4

8. சேண் ஆர் மேருச் சிலை வளைத்த சிவனார் அடியார் திருக்கூட்டம் 0498-1
பேணாது ஏகும் ஊரனுக்கும் பிரான் ஆம் தன்மைப் பிறை சூடிப் 0498-2
பூண் ஆர் அரவம் புனைந்தார்க்கும் புறகு என்று உரைக்க மற்றவர் பால் 0498-3
கோணா அருளைப் பெற்றார் மற்று இனியார் பெருமை கூறுவார் 0498-4

9. ஞாலம் உய்ய நாம் உய்ய நம்பி சைவ நல் நெறியின் 0499-1
சீலம் உய்யத் திருத் தொண்டத் தொகை முன் பாடச் செழு மறைகள் 0499-2
ஓலம் இடவும் உணர்வு அரியார் உடன் ஆம் உளது என்றால் 0499-3
ஆலம் அமுது செய்த பிரான் அடியார் பெருமை அறிந்தார் ஆர் 0499-4

10. ஒக்க நெடு நாள் இவ் உலகில் உயர்ந்த சைவப் பெரும் தன்மை 0500-1
தொக்க நிலைமை நெறி போற்றித் தொண்டு பெற்ற விறன் மிண்டர் 0500-2
தக்க வகையால் தம் பெருமான் அருளினாலே தாள் நிழல் கீழ் 0500-3
மிக்க கண நாயகர் ஆகும் தன்மை பெற்று விளங்கினார் 0500-4

1.1 வேறு பிரிது என் திருத் தொண்டத் தொகையால் உலகு விளங்க வரும் 0501-1
பேறு தனக்குக் காரணர் ஆம் பிரானார் விறன் மிண்டரின் பெருமை 0501-2
கூறும் அளவு என் அளவிற்றே அவர் தாள் சென்னி மேல் கொண்டே 0501-3
ஆறை வணிகர் அமர் நீதி அன்பர் திருத் தொண்டு அறைகுவோம் 0501-4

7 அமர் நீதி நாயனார் புராணம்

1. சீரில் நீடிய செம்பியர் பொன்னி நல் நாட்டுக் 0502-1
காரின் மேவிய களி அளி மலர்ப் பொழில் சூழ்ந்து 0502-2
தேரின் மேவிய செழு மணிவீதிகள் சிறந்து 0502-3
பாரில் நீடிய பெருமை சேர் பதி பழையாறை 0502-4

2. மன்னும் அப் பதி வணிகர் தம் குலத்தினில் வந்தார் 0503-1
பொன்னும் முத்தும் நல் மணிகளும் பூம் துகில் முதலா 0503-2
எந் நிலத்தினும் உள்ளன வரும் வளத்து இயல்பால் 0503-3
அந் நிலைக்கண் மிக்கவர் அமர் நீதியார் என்பார் 0503-4

3. சிந்தை செய்வது சிவன் கழல் அல்லது ஒன்று இல்லார் 0504-1
அந்தி வண்ணர் தம் அடியவர்க்கு அமுது செய்வித்துக் 0504-2
கந்தை கீள் உடை கோவணம் கருத்து அறிந்து உதவி 0504-3
வந்த செல்வத்தின் வளத்தினால் வரும் பயன் கொள்வார் 0504-4

4. முக்கண் நக்கர் ஆம் முதல்வனார் அவர் திரு நலூர் 0505-1
மிக்க சீர் வளர் திருவிழா விருப்புடன் வணங்கித் 0505-2
தக்க அன்பர்கள் அமுது செய் திருமடம் சமைத்தார் 0505-3
தொக்க சுற்றமும் தாமும் வந்து அணைந்தனர் தூயோர் 0505-4

5. மருவும் அன்பொடு வணங்கினர் மணி கண்டர் நல்லூர்த் 0506-1
திரு விழா அணி சேவித்துத் திரு மடத்து அடியார் 0506-2
பெருகும் இன்பமோடு அமுது செய்திட அருள் பேணி 0506-3
உருகு சிந்தையின் மகிழ்ந்து உறை நாள் இடை ஒருநாள் 0506-4

6. பிறைத் தளிர் சடைப் பெருந்தகைப் பெரும் திரு நல்லூர்க் 0507-1
கறைக் களத்து இறை கோவணப் பெருமை முன் காட்டி 0507-2
நிறைத்த அன்பு உடைத் தொண்டர்க்கு நீடு அருள் கொடுப்பான் 0507-3
மறைக் குலத்து ஒரு பிரமசாரியின் வடிவு ஆகி 0507-4

7. செய்ய புன் சடை கரந்தது ஓர் திருமுடிச் சிகையும் 0508-1
சைவ வெண் திரு நீற்று முண்டகத்து ஒளித் தழைப்பும் 0508-2
மெய்யின் வெண் புரி நூலுடன் விளங்கும் மான் தோலும் 0508-3
கையில் மன்னிய பவித்திர மரகதக் கதிரும் 0508-4

8. முஞ்சி நாண் உற முடிந்தது சாத்திய அரையில் 0509-1
தஞ்ச மா மறைக் கோவண ஆடையின் தசைவும் 0509-2
வஞ்ச வல் வினைக் கறுப்பு அறும் மனத்து அடியார்கள் 0509-3
நெஞ்சில் நீங்கிடா அடி மலர் நீள் நிலம் பொலிய 0509-4

9. கண்டவர்க்கு உறு காதலின் மனம் கரைந்து உருகத் 0510-1
தொண்டர் அன்பு எனும் தூ நெறி வெளிப் படுப்பார் ஆய்த் 0510-2
தண்டின் மீது திரு கோவணம் நீற்றுப்பை தருப்பை 0510-3
கொண்டு வந்து அமர் நீதியார் திரு மடம் குறுக 0510-4

10. வடிவு காண்டலும் மனத்தினும் மிக முகம் மலர்ந்து 0511-1
கடிது வந்து எதிர் வணங்கி இம் மடத்தினில் காணும் 0511-2
படி இலாத நீர் அணைய முன் பயில் தவம் என் ஓ 0511-3
அடியனேன் செய்தது என்றனர் அமர்நீதி அன்பர் 0511-4

1.1 பேணும் அன்பரை நோக்கி நீர் பெருகிய அடியார்க்கு 0512-1
ஊணும் மேன்மையில் ஊட்டி நற் கந்தை கீள் உடைகள் 0512-2
யாணர் வெண் கிழிக் கோவணம் ஈதல் கேட்டு உம்மைக் 0512-3
காண வந்தனம் என்றனன் கண் நுதல் கரந்தோன் 0512-4

12. என்று தம்பிரான் அருள் செய இத் திரு மடத்தே 0513-1
நன்று நான் மறை நல் தவர் அமுது செய்து அருளத் 0513-2
துன்று வேதியர் தூய்மையின் அமைப்பதும் உளதால் 0513-3
இன்று நீரும் இங்கு அமுது செய்து அருளும் என்று இறைஞ்ச 0513-4

13. வணங்கும் அன்பரை நோக்கி அம் மறையவர் இசைந்தே 0514-1
அணங்கு நீர்ப் பொன்னி ஆடி நான் வர மழை வரினும் 0514-2
உணங்கு கோவணம் வைத்து நீர் தாரும் என்று ஒரு வெண் 0514-3
குணம் கொள் கோவணம் தண்டினில் அவிழ்த்துக் கொடுப்பார் 0514-4

14. ஓங்கு கோவணப் பெருமையை உள்ளவாறு உமக்கே 0515-1
ஈங்கு நான் சொல்ல வேண்டுவது இல்லை நீர் இதனை 0515-2
வாங்கி நான் வரும் அளவும் உம்மிடத்து இகழாதே 0515-3
ஆங்கு வைத்து நீர் தாரும் என்று அவர் கையில் கொடுத்தார் 0515-4

15. கொடுத்த கோவணம் கைக் கொண்டு கோது இலா அன்பர் 0516-1
கடுப்பில் இங்கு எழுந்து அருளும் நீர் குளித்து எனக் கங்கை 0516-2
மடுத்த தும்பிய வளர் சடை மறைத்த அம் மறையோர் 0516-3
அடுத்த தெண் திரைப் பொன்னி நீர் ஆட என்று அன்றார் 0516-4

16. தந்த கோவணம் வாங்கிய தனிப் பெரும் தொண்டர் 0517-1
முந்தை அந்தணர் மொழி கொண்டு முன்பு தாம் கொடுக்கும் 0517-2
கந்தை கீள் உடை கோவணம் அன்றி ஓர் காப்புச் 0517-3
சிந்தை செய்து வேறு இடத்து ஒரு சேமத்தின் வைத்தார் 0517-4

17. போன வேதியர் வைத்த கோவணத்தினைப் போக்கிப் 0518-1
பானல் அம் துறைப் பொன்னி நீர் படிந்து வந்தாரோ 0518-2
தூ நறும் சடைக் கங்கை நீர் தோய்ந்து வந்தாரோ 0518-3
வானம் நீர் மழை பொழிந்திட நனைந்து வந்து அணைந்தார் 0518-4

18. கதிர் இளம் பிறைக் கண்ணியர் நண்ணிய பொழுதில் 0519-1
முதிரும் அன்பு உடைத் தொண்டர் தாம் முறைமையின் முன்னே 0519-2
அதிக நன்மையின் அறு சுவைத் திரு அமுது ஆக்கி 0519-3

எதிர் எழுந்து சென்று இறைஞ்சிட நிறைந்த நூல் மார்பர் 0519-4

19. தொண்டர் அன்பு எனும் தூய நீர் ஆடுதல் வேண்டி 0520-1
மண்டு தண் புனல் மூழ்கிய ஈரத்தை மாற்றத் 0520-2
தண்டின் மேல் அதும் ஈரம் நான் தந்த கோவணத்தைக் 0520-3
கொண்டு வாரும் என்று உரைத்தனர் கோவணக் கள்வர் 0520-4

20. ஐயர் கைதவம் அறிவுறாது அவர் கடிது அணுகி 0521-1
எய்தி நோக்கு உறக் கோவணம் இருந்த வேறு இடத்தில் 0521-2
மை இல் சிந்தையர் கண்டிலர் வைத்த கோவணம் முன் 0521-3
செய்தது என் என்று திகைத்தனர் தேடுவார் ஆனார் 0521-4

21. பொங்கு வெண் கிழிக் கோவணம் போயின நெறி மேல் 0522-1
சங்கை இன்றியே தப்பினது என்று தம் சரக்கில் 0522-2
எங்கு நாடியும் கண்டிலர் என் செய்வார் நின்றார் 0522-3
அம் கண் வேதியர் பெரும் தொடக்கினில் அகப் பட்டார் 0522-4

2.2 மனைவி யாரொடு மன்னிய கிளைஞரும் தாமும் 0523-1
இனையது ஒன்று வந்து எய்தியது என இடர் கூர்ந்து 0523-2
நினைவது ஒன்று இலர் வருந்தினர் நிற்கவும் மாட்டார் 0523-3
புனைய வேறு ஒரு கோவணம் கொடு புறப்பட்டார் 0523-4

23. அத்தர் முன்பு சென்று அடிகள் நீர் தந்த கோவணத்தை 0524-1
வைத்த இடத்து நான் கண்டிலேன் மற்றும் ஓர் இடத்தில் 0524-2
உய்த்து ஒளித்தனர் இல்லை அஃது ஒழிந்தவாறு அறியேன் 0524-3
இத்தகைத்த வேறு அதிசயம் கண்டிலேன் என்று 0524-4

24. வேறு நல்லது ஓர் கோவணம் விரும்பி முன் கொணர்ந்தேன் 0525-1
கீறு கோவணம் அன்று நெய்து அமைத்தது கிளர் கொள் 0525-2
நீறு சாத்திய நெற்றியீர் மற்று அது களைந்து 0525-3
மாறு சாத்தி என் பிழை பொறுப்பீர் என வணங்க 0525-4

25. நின்ற வேதியர் வெகுண்டு அமர் நீதியார் நிலைமை 0526-1
நன்று சாலவும் நாள் இடை கழிந்ததும் அன்று ஆல் 0526-2
இன்று நான் வைத்த கோவணம் கொண்டு அதற்கு எதிர் வேறு 0526-3
ஒன்று கொள்க என உரைப்பதே நீர் என உரையா 0526-4

26. நல்ல கோவணம் கொடுப்பன் என்று உலகின் மேல் நாளும் 0527-1
சொல்லும் விதத்தது என் கோவணம் கொள்வது துணிந்தோ 0527-2
ஒல்லை ஈங்கு உறு வாணிபம் அழகிதே உமக்கு என்று 0527-3
எல்லை இல்லான் எரி துள்ளினால் என வெகுண்டான் 0527-4

27. மறி கரந்து தண்டு ஏந்திய மறைவர் வெகுளப் 0528-1
பொறி கலங்கிய உணர்வினர் ஆய் முகம் புலந்து 0528-2
சிறிய என் பெரும் பிழை பொறுத்து அருள் செய்வீர் அடியேன் 0528-3
அறிய வந்தது ஒன்று என அடி பணிந்து அயர்வார் 0528-4

28. செயத்தகும் பணி செய்வன் இக் கோவணம் அன்றி 0529-1
நயத் தகுந்தன நல்ல பட்டு ஆடைகள் மணிகள் 0529-2
உயர்த்த கோடி கொண்டு அருளும் என்று உடம்பினில் அடங்காப் 0529-3
பயந்து ஒடுங்கும் குலைந்து அடி மிசைப் பல முறை பணிந்தார் 0529-4

29. பணியும் அன்பரை நோக்கி அப் பரம் பொருள் ஆனார் 0530-1
தணியும் உள்ளத்தார் ஆயினார் போன்று நீர் தந்த 0530-2
மணியும் பொன்னும் நல் ஆடையும் மற்றும் என் செய்ய 0530-3
அணியும் கோவணம் நேர் தர அமையும் என்றான் 0530-4

30. மலர்ந்த சிந்தையர் ஆகிய வணிகர் ஏறு அனையார் 0531-1

அலர்ந்த வெண் நிறக் கோவணம் அதற்கு நேராக 0531-2
இலங்கு பூந் துகில் கொள்வதற்கு இசைந்து அருள் செய்யீர் 0531-3
நலம் கொள் கோவணம் தரும் பரிசு யாதென நம்பர் 0531-4

31. உடுத்த கோவணம் ஒழிய நாம் உம் கையில் தர நீர் 0532-1
கொடுத்தது ஆக முன் சொல்லும் அக் கிழிந்த கோவணம் நீர் 0532-2
அடுத்த கோவணம் இது என்று தண்டினில் அவிழாது 0532-3
எடுத்து மற்று இதன் எடை இடும் கோவணம் என்றார் 0532-4

32. நன்று சால என்று அன்பரும் ஒரு துலை நாட்டக் 0533-1
குன்ற வில்லியார் கோவணம் ஒரு தட்டில் இட்டார் 0533-2
நின்ற தொண்டரும் கையினில் நெய்த கோவணத் தட்டு 0533-3
ஒன்றிலே இட நிறை நிலாது ஒழிந்தமை கண்டார் 0533-4

3.3 நாடும் அன்பு ஒடு நாயன்மார்க் களிக்க முன் வைத்த 0534-1
நீடு கோவணம் அடைய நேராக ஒன்றாக் 0534-2
கோடு தட்டின் மீது இடக் கொண்டு எழுந்தது கண்டு 0534-3
ஆடு சேவடிக்கு அயரும் அற்புதம் எய்தி 0534-4

34. உலகில் இல்லது ஓர் மாயை இக் கோவணம் ஒன்றுக்கு 0535-1
அலகில் கோவணம் ஒத்தில என்று அதிசயத்துப் 0535-2
பலவும் மென் துகில் பட்டுடன் இட இட உயர 0535-3
இலகு பூம் துகில் பொதிகளை எடுத்து மேல் இட்டார் 0535-4

35. முட்டில் அன்பர் தம் அன்பு இடும் தட்டுக்கு முதல்வர் 0536-1
மட்டு நின்ற தட்டு அருளொடு தாழ்வு உறும் வழக்கால் 0536-2
பட்டொடும் துகில் அநேக கோடிகள் இடும் பத்தர் 0536-3
தட்டு மேல் படத் தாழ்ந்தது கோவணத் தட்டு 0536-4

36. ஆன தன்மை கண்டு அடியவர் அஞ்சி அந்தணர் முன் 0537-1
தூ நறும் துகில் வர்க்க நூல் வர்க்கமே முதலா 0537-2
மானம் இல்லன் குவிக்கவும் தட்டின் மட்டு இதுவால் 0537-3
ஏனை என் தனம் இடப்பெற வேண்டும் என்று இறைஞ்ச 0537-4

37. மங்கை பாகராம் மறையவர் மற்று அதற்கு இசைந்தே 0538-1
இங்கு நாம் இனி வேறு ஒன்று சொல்வது என் கொல் 0538-2
அங்கு மற்று உங்கள் தனங்களில் ஆகிலும் இடுவீர் 0538-3
எங்கள் கோவணம் நேர் நிற்க வேண்டுவது என்றார் 0538-4

38. நல்ல பொன்னொடும் வெள்ளியும் நவ மணித் திரளும் 0539-1
பல் வகைத் திறத்து உலோகமும் புணர்ச்சிகள் பலவும் 0539-2
எல்லை இல் பொருள் சுமந்து அவர் இட இடக் கொண்டே 0539-3
மல்கு தட்டு மீது எழுந்தது வியந்தனர் மண்ணோர் 0539-4

39. தவம் நிறைந்த நான் மறைப் பொருள் நூல்களால் சமைந்த 0540-1
சிவன் விரும்பிய கோவணம் இடும் செழும் தட்டுக்கு 0540-2
அவனி மேல் அமர் நீதியார் தனம் எல்லாம் அன்றிப் 0540-3
புவனம் யாவையும் நேர் நிலா என்பது புகழோ 0540-4

40. நிலைமை மற்று அது நோக்கிய நிகர் இலார் நேர் நின்று 0541-1
உலைவில் பஃறனம் ஒன்று ஒழியாமை உய்த்து ஒழிந்தேன் 0541-2
தலைவ யானும் என் மனைவியும் சிறுவனும் தகுமேல் 0541-3
துலையில் ஏறிடப் பெறுவது உன் அருள் எனத் தொழுதார் 0541-4

41. நிலைமை மற்று அது நோக்கிய நிகர் இலார் நேர் நின்று 0542-1
அச்சம் முன்பு உற உரைத்தலும் அங்கணர் அருளால் 0542-2
நிச்சயித்தவர் நிலையினைத் துலை எனும் சலத்தால் 0542-3
இச் சழக்கின் இன்று ஏற்றுவார் ஏறுதற்கு இசைந்தார் 0542-4

42. மனம் மகிழ்ந்து அவர் மலர்க்கழல் சென்னியால் வணங்கிப் 0543-1
புனை மலர்க் குழல் மனைவியார் தம்மொடு புதல்வன் 0543-2
தனை உடன் கொடு தனித் துலை வலம் கொண்டு தகவால் 0543-3
இனைய செய்கையில் ஏறுவார் கூறுவார் எடுத்து 0543-4

43. இழைத்த அன்பினில் இறை திருநீற்று மெய் அடிமை 0544-1
பிழைத்திலோம் எனில் பெரும் துலை நேர் நிற்க என்று 0544-2
மழைத் தடம் பொழில் திரு நல்லூர் இறைவரை வணங்கித் 0544-3
தழைத்த அஞ்சு எழுத்து ஓதினார் ஏறினார் தட்டில் 0544-4

4.4 மண்டு காதலின் மற்று அவர் மகிழ்ந்து உடன் ஏற 0545-1
அண்டர் தம்பிரான் திரு அரைக் கோவணம் அதுவும் 0545-2
கொண்ட அன்பினில் குறைபடா அடியவர் அடிமைத் 0545-3
தொண்டும் ஒத்தலால் ஒத்து நேர் நின்றது அத் துலைதான் 0545-4

45. மதி விளங்கிய தொண்டர் தம் பெருமையை மண்ணோர் 0546-1
துதி செய்து எங்கணும் அதிசயம் உற எதிர் தொழுதார் 0546-2
கதிர் விசும்பு இடை கரந்திட நிரந்த கற்பகத்தின் 0546-3
புதிய பூ மழை இமையவர் மகிழ்வுடன் பொழிந்தார் 0546-4

46. அண்டர் பூ மழை பொழிய மற்று அதன் இடை ஒளித்த 0547-1
முண்ட வேதியர் ஒரு வழியான் முதல் நல்லூர்ப் 0547-2
பண்டு தாம் பயில் கோலமே விசும்பினில் பாகம் 0547-3
கொண்ட பேதையும் தாமும் ஆய்க் காட்சி முன் கொடுத்தார் 0547-4

47. தொழுது போற்றி அத் துலை மிசை நின்று நேர் துதிக்கும் 0548-1
வழுஇல் அன்பரும் மைந்தரும் மனைவியார் தாமும் 0548-2
முழுதும் இன் அருள் பெற்றுத் தம் முன் தொழுது இருக்கும் 0548-3
அழிவு இல் வான் பதம் கொடுத்து எழுந்து அருளினார் ஐயர் 0548-4

48. நாதர் தம் திரு அருளினால் நல் பெரும் துலையே 0549-1
மீது கொண்டு எழு விமானம் அது ஆகி மேல் செல்லக் 0549-2
கோதில் அன்பரும் குடும்பமும் குறைவு அறக் கொடுத்த 0549-3
ஆதி மூர்த்தியார் உடன் சிவ புரியினை அணைந்தார் 0549-4

49. மலர் மிசை அயனும் மாலும் காணுதற்கு அரிய வள்ளல் 0550-1
பலர் புகழ் வெண்ணெய் நல்லூர் அவணப் பழமை காட்டி 0550-2
உலகு உய்ய ஆண்டு கொள்ளப் பெற்றவர் பாதம் உன்னித் 0550-3
தலை மிசை வைத்து வாழும் தலைமை நம் தலைமை ஆகும் 0550-4

தில்லை வாழந்தணர் சருக்கம் முற்றிற்று.

---

This file was last revised on 08 May 2004

---

See Also:
1. Stories of the nAyanmAr in English with Pictures

Back to periya purANam Page
Back to thirumuRai Page
Back to Shaiva Sidhdhantha Home Page